செ.வெ.எண்: 08 நாள்: 03.02.2020

**தூத்துக்குடி இந்திராநகர் மற்றும் திரு.வி.க. நகர் பகுதியில் வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தம் பெயர் சேர்க்க விண்ணப்பபித்தவர்கள் வீடுகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் 23.12.2019 அன்று வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதன் தொடர்பு 01.01.2020 அன்று தகுதி நாளாக்க கொண்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும் பணியில் மேற்கொள்ளப்பட்டது. இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி 04.01.2020, 05.01.2020, 11.01.2020, 12.01.2020 ஆகிய நாட்களில் பெயர் சேர்த்தல், நீக்குதல் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2020 தொடர்பான பணிகள் நடைபெற்று வருகிறது. 31.01.2020 அன்று வரை 43,824 விண்ணப்ப படிவங்கள் பெறப்பட்டு அனைத்தும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அனுப்பி கள ஆய்வுகள் நடைபெற்று வந்தது. படிவம் 7, 8, 8 A உள்ளிட்ட படிவங்கள் மீது 100 சதவீதம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் களஆய்வு செய்து தகுதியான வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தூத்துக்குடி மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அவர்கள் ஏற்கனவே அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். மேலும், சிறப்பு சுருக்கமுறை திருத்தம் தொடர்பான பணிகளை இன்றுடன் முடிக்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் இப்பணிகள் நடைபெற்று வந்தது.

இன்று (03.02.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மேற்கொண்ட கள ஆய்வு பணிகளை இந்திராநகர் மற்றும் திரு.வி.க. நகர் பகுதியில் படிவம் 6, படிவம் 7, 8 வழங்கியுள்ளவர்களின் வீடுகளுக்கு சென்று நேரில் ஆய்வு செய்தார். வட்டாச்சியரிடம் படிவங்கள் உடனடியாக ஆய்வு செய்து பணிகளை முடிக்க உத்தரவிட்டார்.

ஆய்வின்போது வட்டாச்சியர் திரு.செல்வக்குமார், வருவாய் ஆய்வாளர் திரு.கோமதி, தேர்தல் வருவாய் ஆய்வாளர் திரு.சரவணபவன்ராஜ், வாக்கு சாவடி நிலை அலுவலர்கள் திரு.உச்சிமாளி, திருமதி.சுந்தரி உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்.**